1970 மார்ச் 14]

லாவது இது போன்ற குறைந்த பட்ச ஏற்பாடுகளை அல்லது அபிவிருத்தியை மேற்கொள்ள அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் அவர்கள் இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். கூடுமான வரையில் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் எல்லாப் பிரிவுகளும் படிப்படியாக நிறுவப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து முதலாவது வருடத்தில் 11 இடங்களிலும் இரண்டாவது ஆண்டில் 6 இடங்களிலும் அதற்கு அடுத்த ஆண்டில் 5 இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த ரீதியில் போனால் தமிழ்நாட்டில் உள்ள எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் இப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு ஒரு நூற்றாண்டு ஆகிவிடும். விஞ்ஞானம், மருத்துவம் இவை வளர்ந்துவரும் இக் காலத்தில் இவை சாதாரணத் தேவைகள்தான். ஆகவே விரைவில் எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் மிக அவசியமான இப்பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதல் வருடத்தில் 11 என்று திட்டம் தீட்டப்பட்டு அதுதான் 6, 5 என்று பிரித்துத் தாப்பட்டிருக்கிறது, 1968-69-ல் 6-ம், 1969-70-ல் 5-ம் என்று. எதுவும் இல்லாத இடத்தில் இதையாவது தொடங்குகிறோமே என்பதைக் கவனிக்க வேண்டும். நூற்றாண்டுக் காலம் ஆகிவிடும் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் கதிர் வீச்சுக் கருவிகள் எல்லாம் ஒரு சூழ்நிலையில் இருந்து மெல்ல மெல்ல தொடங்கப்பட்டு நிதிப் பற்றாக்குறை காரணமாக 6, 5 என்று 11 இடங்களில் என்றிருக்கிறது. படிப்படியாகத்தான் நாம் போக வேண்டும். நிதி நிலை சிறிது அதிகமாகச் சேருமானால்—நானும் அதிகமாகத்தான் கேட்டுக்கொண்டு வருகிறேன்—பொதுநலத் துறைக்கும், மருத்துவத் துறைக்கும் நல்லது. ஆகவே ஒன்றும் இல்லாத இடத்தில் இவ்வளவாவது செய்யப்பட்டிருக்கிறதே என்று மகிழ வேண்டியவர்களாக இருக்கிறோம். நீண்ட காலம் ஆகாது. எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கு வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Employees of Madras Institute of Technology.

*370 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether any representation was made to the Hon. Minister for Education by the Employees of the Madras Institute of Technology at Chromepet, regarding the non-implementation of revised scales by their management ; and

(b) if so, the action taken by the Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பவியல் நிலையம் சுயேச்சை நிறுவனமாகும். எனவே அரசு இதில் தலையிடுவதற்கில்லை.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that a number of grievances of the Madras Institute of Technology have to be redressed? Also is it not a fact that they have submitted a Memorandum and if so, what are the contents of the Memorandum? Also recently there was a move for the State Government to take over the Institute and whether there was any such proposal to take over it?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி, தனியார் துறையில் நடைபெறுவதால் அதிலே நம் தலையீடு இல்லாமல் இருக்கிறது. எந்தக் காரியம் என்னென்ன என்பதுபற்றிய விவரக் குறிப்புகள் இங்கு இல்லை. இப்பொழுதுதான் இந்த நிறுவனத்திற்கு மத்திய அரசும், மாநில அரசும் பொறுப்பேற்று, அண்மையில் 10 நாட்களுக்கு முன்புதான் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அந்தப் பொறுப்பு, என்கீழ் வந்ததற்குப் பிறகு, வந்திருக்கிற குறைபாடுகளைக் கவனித்து, என்னென்ன செய்ய இயலுமோ அதை இனிமேல் செய்ய முயற்சி செய்யலாம்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொழில் தொடர்புள்ள கல்வி.

** 371 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள் :* மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டத்தில் "யுனெஸ்கோ" உதவியுடன் தொடங்கும் தொழில் தொடர்பான கல்வித் திட்டம் எப்பொழுது தொடங்கப்படுவதாக உள்ளது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் குடியானவர்களுக்குத் தொழில் தொடர்பான முதியோர் கல்வி அளிக்கும் 60 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சேர்ந்தவர்களுக்கு முதல் தொகுதியாக 19—3—1969 முதல் 18—9—1969 வரை ஆறு திங்கள்களுக்கு வகுப்புகள் நடத்தப் பெற்றன. இரண்டாவது தொகுதியாக அவற்றில் சேர்ந்தவர்களுக்கு 20—11—1969 முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

இராணிப்பேட்டையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்

** 372 வினா.—திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :* மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராணிப்பேட்டை நகராட்சி மன்றத்துக்கு தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கட்டடம் விஸ்தரிப்பு, இயந்திரங்கள்